மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[illegible] ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை (06 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 10

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## அரசுத் தரப்பில் தீர்மானம்:

# முதலில் மோதல் தவிர்ப்பு; பின்னர் யுத்த நிறுத்தம்!

## நத்தாருடன் நடைமுறைக்கு

கொழும்பு, டிசம்பர் 6

✶ முதலில் மோதல் தவிர்ப்பு நிலையை (Cessation Of Hostilities) ஏற்படுத்துதல்.

✶ பின்னரே யுத்த நிறுத்தம் (Ceasefire) செய்தல்.

இவ்வாறு அரசு தீர்மானித்திருப்பதாகவும், யுத்த நிறுத்தம் அனேகமாக நத்தாருடன் நடைமுறைக்கு வரும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக 'நத்தார் யுத்த நிறுத்தம்' என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழின் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முதல் நடவடிக்கையாக மோதல் தவிர்ப்பை ஏற்படுத்திக் கொள்வது என்றும் —

யுத்த நிறுத்தம் செய்வதில்லை என்றும் அரசு தீர்மானித்திருக்கிறது.

இதன் கருத்து என்னவென்றால் —

ஒரு தரப்பின் முகாம்கள் மற்றும் ரோந்துக் குழுக்கள் மீது மறு தரப்பினர் தாக்குதல் நடத்துவதில்லை என்பதாகும்.

ஆனால் யுத்த நடவடிக்கைகளான 'பங்கர்கள் கட்டுவது, தாக்குதல் நிலைகளை பலப்படுத்துவது மற்றும் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்ளவது போன்றவை தொடர்ந்து இடம்பெறும்.

இந்த மோதல் தவிர்ப்பை ஏற்படுத்துவதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை ஆனால் இதனை அகதிகளுக்க வஜ நா. தூரக ரம கண்காணிக்க வேண்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்த ரத்வத்தைக்கு கடும் பாதுகாப்பு!

### புலிகளிடமிருந்து ஆபத்தாம்

கொழும்பு, டிச. 6

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் உயிருக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து இன்னும் ஆபத்து இருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மீண்டும் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

வழமையான மெய்ப்பாதுகாவலர்களுடன், இராணுவ கொமாண்டோ படையினரும் ரத்வத்தைக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

கேணல் ரத்வத்தையைச் சுற்றிவளைத்து 'மனித சுவராக' இராணுவக் கொமாண்டோக்கள் சிவில் உடையில் காவல் புரிந்து வருகின்றனர் என்றும்—

அலுவலகத்துக்கு வெளியே விருந்துபசாரங்களிலும் வெளிநாட்டுத் தூதர்களைச் சந்திக்கும்போதும் ரத்வத்தைக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## சமஷ்டித் தீர்வை ரணில் பரிசீலிக்கத் தயார்!

கொழும்பு, டிச. 6

இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி அரசமைப்புக் கோரிக்கையை பரிசீலனை செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்திருக்கிறார்.

கடந்த புதன்கிழமை முன்னாள் பிரதமர் ரணில், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசினார்.

அப்போதே ரணில் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இதனை பத்திரிகைகளுக்கு தெரிவிக்கலாமா என்று தேவானந்தா கேட்டதற்கு—

''ஆம்'' என ரணில் பதிலளித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

நீண்டகால இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு, எதிரணி உதவக்கூடும் என்ற நல்ல சமிக்ஞையாக இது அமைந்துள்ளது என்றும் அப்பத்திரிகையின் அரசியல் செய்தியாளர் கருத்து வெளியிட்டிருக்கிறார்

தனது தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியில் இனவாதத்துக்கு இடமில்லை என்றும் தேவானந்தாவுக்குக் ரணில் கூறினார்.

(உ-எ)

## பிரபாவின் உரையை அரசு கவனமாகப் படிக்கின்றது

கொழும்பு, டிச. 6

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் மாவீரர் தினமன்று நிகழ்த்திய வானொலி உரையை பாதுகாப்புத்துறையும் அரசாங்கமும் கவனமாகப் படித்து வருவதாகவும்—

அந்த உரையில் வரிகளுக்கு இடையில் மறைந்துள்ள அர்த்தங்களை அறிந்து கொள்வதே அதன் நோக்கம் என்றும் ''சண்டே ஒப்சேர்வரில்'' வெளியான பாதுகாப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

## பூநகரிப் பாதையை திறக்க அரைமனதுடன் இணக்கம்

### ஆனால் படை முகாம் இருக்குமாம்

கொழும்பு, டிச. 6

பூநகரி — சங்குப்பிட்டி பாதையை போக்குவரத்துக்கு திறப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அரைமனதுடன் இணங்கியுள்ளது என்றும் —

எனினும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி இராணுவ முகாம் அகற்றப் படமாட்டாது என்றும் —

''சண்டேரைம்ஸின்'' இராணுவ பகுப்பாய்வாளர் எழுதியுள்ளார்.

ஆனால் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் திரும்பத்திரும்ப கோருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

பூநகரிப்பாதையிலும் பார்க்க ஆனையிறவுப் பாதையைத் திறப்பதையே இராணுவம் விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு முகாமைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் மூலம் முகாமை வீழ்ச்சி அடையச் செய்யும் ஆபத்து, பூநகரி இராணுவ முகாமிலும் பார்க்க குறைவாக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## வவுனியா கோட்டத்தில் தமிழீழ நீதிமன்றம்

### நேற்று திறந்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 6

வவுனியாக் கோட்டத்துக்கான தமிழீழ நீதிமன்று நேற்று கனகராயன்குளத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

திறப்புவிழாவுக்குத் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமை வகித்தார். தமிழீழ காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் திரு. ரமேஸ் தேசியக் கொடியை ஏற்றினார்.

நீதிமன்றத்தின் பெயர்ப் பலகையை வன்னி மாவட்டத் தளபதி திரு. சூட்டி திரை நீக்கம்செய்தார். தொடர்ந்து மங்கள விளக்கை கிளிநொச்சி கோட்ட பொறுப்பாளர் திரு. இலக்கியனும்' வன்னிப் பகுதி செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜூலியும் ஏற்றினர்

நீதிமன்றத்தை தமிழீழ அரசியல்துறைத் துணைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி கடலில் கைதானவர் வவுனியாவில் விடுவிப்பு!

கொழும்பு, டிச. 6

பூநகரி கடற்கரை பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட வடபகுதி மீனவர் ஒருவர் கடந்த வியாழனன்று வவுனியாவில் வைத்து பொலீஸாரினால் விடுதலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரம் அம்மன் குடியிருப்பு வாசியான முருகேசு நாகராசா (வயது 56) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

இடம்பெயர்ந்து கிளாலி பண்டிதர் குடியிருப்பில் வசித்து வந்த இவர் கடந்த 19 ஆம் திகதி குஞ்சுப்பரந்தன் பகுதிக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தசமயம் படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா ஐ.தே.க பக்கம் விரைவில் வந்துவிடுவாராம்

### அக்கட்சிப் பிரமுகர்கள் நம்பிக்கை

''அமைச்சர் தொண்டமான் இன்னும் சிறிது காலத்தில் எம்பக்கம் வந்து விடுவார்'— என்ற கருத்து கடந்த ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் சிலரால் வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தொண்டமானை [illegible]

ஏனைய இ. தொ. காவின் எம்.பிக்களையும் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று முக்கிய தலைவர்கள் கூட்டத்தில் வற்புறுத்தியபோது, முக்கிய [illegible] கூறினார் என்று இதில் [illegible]

## ஐ.தே.க. தேர்தல் நிதியில் பத்து கோடி ரூபா மாயம்!

### விஜேதுங்கா மீதும் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 6

ஓகஸ்ட் நாடாளுமன்றத் தேர்தல், நவம்பர் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றுக்காக ஐக்கிய தேசியக் கட்சி 15 கோடி ரூபா திரட்டியதாகவும் —

அதில் 5 கோடி 30 லட்சம் ரூபா மட்டுமே பொதுத் தேர்தலுக்கு செலவழிக்கப்பட்டதாகவும் —

எஞ்சிய சுமார் 10 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை —

முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா கடந்த ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் —

கட்சி நிதிக்குழுவின் அனுமதியின்றி, கட்சிப்பணத்தை முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்கா தனது எண்ணப்படி செலவழித்தார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். கட்சி நிதியில் பணமே இப்போது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மேயரும் கட்சிப் பொருளாளருமான கே. கணேசலிங்கம் பேசுகையில் விஜேதுங்கா தனது எண்ணப்படியே நடந்துள்ளார் என்று கூறினார்

கட்சிக்கு நன்கொடையாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றரைக் கோடி ரூபா செலவில் ராணுவத்துக்கு 350 கவச உடைகள்!

கொழும்பு, டிச. 6

இராணுவத்தில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகளுக்கு கவசஉடை வாங்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

ஆயிரம் கவச உடைகள் [Body Armour] வாங்க இராணுவம் விண்ணப்பித்ததாகவும் —

அமைச்சு 350 கவச உடைகள் வாங்கவே அனுமதி வழங்கியது என்றும் —

''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

ஒரு உடையின் விலை 550 பவுண் ஸ்ரேர்லிங் அல்லது 43 ஆயிரம் ரூபாவாகும்என்று தெரிவிக்கப்படுகிறது. கவச உடைகள் வாங்க மொத்தச் செலவு ஒரு கோடி 50 லட்சம் ரூபா ஆகிறது.

கேள்விப்பத்திரங்கள் கோரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அமைச்சர் நாளை வருகை

கொழும்பு, டிச. 6

அமெரிக்க அரசின் உதவி வெளியுறவு அமைச்சர் கார்னி நாளை புதன்கிழமை கொழும்பு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரணவிலவில் ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' வானொலி நிலையம் அமைக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து பேச்சுகள் நடத்தவே அவர் வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. [உ-எ)

## ஜனாதிபதி செயலகத்தில் சந்திரிகா!

கொழும்பு, டிச. 6

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையிலிருந்து கடமையாற்றிவந்த சந்திரிகா குமாரதுங்க நேற்று ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக தனது பணிகளை ஆரம்பித்தார். (உ-4)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## முச்சந்தி முரளி



ஆட்சி மாறினாத்தான் [illegible] அணி மாறுவார் என்டது உவையளுக்கு விளங்கயில்லைப் போலை !

## படகில் சென்ற 7 தமிழர் படையினரால் கொலை!

### மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, டிச 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஏழுபேர் கொல்லப்பட்டனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

படகில் பயணம் செய்த பொதுமக்களை விடுதலைப் புலிகள் என எண்ணிய படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும்—

ஆயினும் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக்கூறிப்படையினர் தமதுசெயலைநியாயப் படுத்தியுள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விவரங்கள் எதுவும் நேற்று இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (ஐ-4)

## அம்பாறை, இயக்கச்சியில் நடந்த தாக்குதல் சம்பவங்களில் படையினர் மூவர் மரணம்!

### ஐவர் படுகாயமடைந்தனர்

கொழும்பு, டிச. 6

நேற்று முன்தினம் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற தாக்குதல்களில் மூன்று படையினர் உயிரிழந்ததாகவும், ஐந்து பேர் காயமுற்றதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

அம்பாறை மாவட்டத்தில் காவல் நிலையம் ஒன்று தாக்கப்பட்டதில் இரு பொலீஸார் உயிரிழந்தனர் என்றும்—

இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல்கள் குறித்து மேலதிக விவரங்கள் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

(உ-4)

## குண்டுத் தாக்குதல் நடத்திய பெண் சாவகச்சேரி வாசி!

### பொலீஸ் கண்டுபிடிப்பாம்

கொழும்பு, டிச. 6

கிராண்ட்பாஸில் காமினி திஸாநாயக்கா உட்பட 57 பேர் உயிரிழக்கக் காரணமான தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் பெண் சாவகச்சேரியைச் சேர்ந்த — 25 வயதுடைய — புஷ்பமலர் என பொலீஸார் கண்டு பிடித்துள்ளனராம்.

''சண்டே லீடர்'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மேற்படி பெண்ணின் பாஸ்போர்ட்டையும், அடை-

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து பாதைதிறப்பு: ஆயர் சௌந்தரநாயகம் சந்திரிகாவுடன் பேச்சு!

கொழும்பு, டிச 6

யாழ். குடாநாட்டுக்கான பாதுகாப்பான பாதை ஒன்று திறக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரியிருக்கிறேன்.

பாதை திறக்கப்படாது போனால் யாழ். கத்தோலிக்க மக்கள் கொழும்பு வந்து பாப்பரசரை தரிசிக்க முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறு யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வு

மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க விளையாட்டுக் கழகம் சிறிபாஸ்கரன் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 1-30 — விநாயகர் எதிர் பொற்பதி 'ஏ'

★ பிற்பகல் 2-30 — ஞான முருகன் 'பி' எதிர் யங்றோயல் 'பி'

★ பிற்பகல் 3-30 — ஞான முருகன் 'ஏ' எதிர் பொற்பதி 'பி'

(ஐ)

## இன்று

கொழும்புத்துறை, டிச.6

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி முருகன் ஆலய உற்சவ காலத்தில் தெய்வீகப் பேருரை நிகழ்த்திவந்த ஓய்வு பெற்ற அதிபர் திரு.கா கணேசதாசனைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சைவ சமய அறிவுப் போட்டியில் சித்தி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவமும் விழாவில் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டம் இன்று செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு. க. திருச்சிற்றம்பலம் தலைமையில் கோண்டாவில் கலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலை மார்ச்சில் நடத்தத் திட்டம்

### ஐ. தே. கவும் தயாராகிறது

கொழும்பு, டிச. 6

மாநகரசபைகள் நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களை முன்கூட்டியே நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும்—

அடுத்த மாதம் இச்சபைகள் கலைக்கப்பட்டு, தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாட்டில் வீசும் சந்திரிகா அலையைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றுவதே பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் நோக்கம் என்று அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

1991 ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சியின் கீழ்நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் 80 சதவீதமான உள்ளூராட்சி சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அடுத்த மார்ச் மாதத்தில் நடத்தும் என்று எதிர்பார்க்கப்படும் 300க்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைச் சந்திக்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராகி வருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

## வீரமாமுனிவர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கத்தோலிக்க இலக்கிய நூல் வெளியீடுகளில் ஒன்றான ''வீரமாமுனிவர்'' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நற்சமூக நடு நிலையத்தில் இடம்பெறும்.

(க-17)


## சாவகச்சேரி நகரசபை
## வரவு செலவுத்திட்டம் -1995

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1995 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 08 - 12 - 1994 ஆம் திகதி தொடக்கம் (7) ஏழு நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 05 - 12 - 94. (சி / 9874)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
## 06-12-1994



செல்வன்
### சத்தியசீலன் மேனகன்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தையும், வேலணை 2 ஆம் வட்டாரத்தையும் சேர்ந்த சத்தியசீலன் சுகந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் மேனகன் தனது முதலாவது பிறந்த தினத்தை 06—12—1994 ஆம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை தனது கிளிநொச்சி இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியத்தை, சின்னத்தை, மாமாமார், அகிலன் சித்தப்பா (பிரான்ஸ்), பெரியம்மா, பெரியப்பா, ஜெயந்தன் மாமா (பிரான்ஸ்), சுமதிச் சித்தி, ரமணிச்சித்தி, ரதினிச்சித்தி, அசோக்மச்சான், சங்கித்மச்சான், அக்கா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முத்துமாரி அம்மன் அருள்வேண்டி பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றார்கள்.

உதயநகர் முத்துமாரி அம்மன் வீதி,
கிளிநொச்சி. (34064)



### யாழ். வணிகர் கழகம் விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

எமது கழக எல்லைக்குட்பட்ட சகல வணிக நிலையங்களுக்கும் எமது கழகத்தால் தரப்பட்ட ''வணிக நிலையத்தின் விவரம்'' 3 பத்திரங்களையும் எதிர்வரும் **08- 12- 1994** வியாழக்கிழமைக்கு முன்தாக பூர்த்திசெய்து கழகப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். இக்குறிப்பிட்ட திகதிக்குள் தரத்தவறுவோருக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதையும் அன்புடன் அறியத்தருகிறோம்.

யாழ் வணிகர் கழகம்

(சி/9872)



### பொதுமக்கள் அனைவருக்கும்
### யாழ். வணிகர் கழகம் விடுக்கும்
## அன்பான வேண்டுகோள்

உங்கள் தங்க ஆபரணங்களை நகை வணிகர் நிலையத்திற்கு விற்க வரும் போது தவறாமல் உங்கள் அடையாள அட்டையை அல்லது குடும்ப அட்டையை கொண்டு செல்லும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

யாழ். வணிகர் கழகம்,
யாழ்ப்பாணம்.

[சி/9873]



## சிவாகி கல்வி நிலையம்

சிவன் வீதி, சாவகச்சேரி.

### G.C.E. O/L
### ஆண்டு 10, 9 வகுப்புகள்
ஆரம்பம்: **9-12-1994**
வெள்ளி பி. ப. 2-30

| | | |
|---|---|---|
| கணிதம் | — | T. நித்தியானந்தன் |
| விஞ்ஞானம் | — | பிறேம் |
| தமிழ் | — | தர்மராஜா |
| ஆங்கிலம் | — | பாலமுருகன் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | R. நித்தி, T. ஜெபதாஸ் |
| வர்த்தகம் | — | ஆனந்தகுமார் கேதீஸ் |
| சமயம் | — | சுதன் |
| சித்திரம் | — | இராஜன் |

(34059)



## முக்கிய அறிவித்தல்

கணக்கியல்
ஆசிரியர்

### திரு. D.SAM

அவர்களின் வகுப்புக்கள் வழமை போல் நடைபெறுகின்றன.

இடம்:
டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையம்
**D.M.I.**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(34062)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சி. சடாட்சரசண்முகதாஸ்

(கலைமாணி இ.நி.சே.)
வடக்கு கிழக்கு மாகாண சபை கல்வி கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (மாகாண பொது நிர்வாகம்) கிராம அபிவிருத்திப் பணிப்பாளர்.

கடமை கண்ணியம், கட்டுப்பாடு, மனிதநேயம் ஆகியவற்றுடன் சிறப்பாகப் பணியாற்றி பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்று, அரசாங்க சேவைக்குப் பெருமை தேடித்தந்த அமரர் சி.சடாட்சரசண்முகதாஸ் அவர்களுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உடுவில் பிரதேச செயலர்,
பணிமனை அலுவலர்கள்,
கிராம அலுவலர்கள்,
வெளிக்கள அலுவலர்கள்.

03-12-94. (34063)



### ரின்ஸோ பாவனையாளர்களுக்கோர் வரப்பிரசாதம்
## மலரப் போகும் புத்தாண்டை முன்னிட்டு விசேட கழிவு விலையில்!

கையிருப்போ சொற்பம் முந்துங்கள்!

## "ரின்ஸோ"

இது லீவர் பிரதேர்ஸ் தயாரிப்பு

275g ரின்ஸோ தற்போதைய கொழும்பு விலை: 24 ரூபா
உங்களுக்கு கிடைக்கும் விசேட விலை 21 ரூபா

வெண்மைதரும் ரின்ஸோவின் சில உண்மைகள்:

- ✶ கழுவிய துணிகளின் நீடித்த நறுமணம் உங்களை சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கிறது.
- ✶ இல்லத்தரசிகளின் வேலைப் பளுவைக் குறைக்கின்றது.
- ✶ துணி வகைகளுக்கு நீண்ட ஆயுளைத் தருகின்றது.
- ✶ குறைந்தளவு ரின்ஸோவில் கூடுதலான துணிகளைக் கழுவி சிக்கனத்தை பேணிடலாம்.
- ✶ பாவனையாளர்கள் பலரை தன்வசப்படுத்தி இலங்கையில் முன்னணி வகிக்கிறது.

விநியோகஸ்தர்கள்:
**சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்**
இல: 148, கண்டி வீதி, சாவகச்சேரி.

கிளை:
**றூபா பன்முக வர்த்தகம்,**
104A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

✶ குறிப்பு: இச்சலுகை 275g ரின்ஸோ பைக்கற்றுக்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

(34060)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்கு பயிருக்கு 200 தொன் உரம் வரும்

உருளைக்கிழங்கு பயிருக்கான உருளைக்கிழங்கு கலவை உரம் 200 மெற்றிக் தொன் விரைவில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. சுந்தரேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இதற்குத் தேவையான உருளைக்கிழங்கு கலவை உரம் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இங்கு வந்து சேரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் மாஹோ கப்பல் கொழும்புக்குச் சென்று மீண்டும் இங்கு வரும் போது இந்த உரத்துடன் வந்து சேரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-173)


## மலிவு விற்பனை

டி. எஸ். ஐ. றப்பர்; பாட்டா பாதணிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். ரொக்கத்திற்கு கொள்முதல் செய்யும் வர்த்தகர்களுக்கு 15% கழிவு கொடுக்கப்படும்.

விற்பனை நடைபெறும் இடம்:-
276, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(34021)



## தோல் (LEATHER) விற்பனைக்கு

தாவரப் பதனிடுதல் முறையிலே பதனிடப்பட்ட ஆட்டு, மாட்டுத்தோல்கள் தற்போது பரபரப்பாக விற்பனையாகின்றன.

தேவைக்கு நாடுங்கள்:

தோல் பதனிடுதல் பிரிவு,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.

(சி-9858)



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
(சாந்தி சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

வகுப்பு 4 – 10, O/L, A/L
SPOKEN ENGLISH
SHORT HAND TYPING

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு
ஆரம்பம்: 08-12-1994

(8058) — நிர்வாகி.



## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

(1) பிரதான உணவகம், திருநெல்வேலி
(2) பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்
(3) ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்
(4) இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்
(5) இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி உணவகம்
(6) மருத்துவபீட உணவகம்
(7) கைதடி, சித்த மருத்துவத்துறை உணவகம்

ஆகிய உணவகங்களை நடத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 15—12—94 ஆம் திகதி நண்பகல் 12-00மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பப் படிவம் ஒரு உணவகத்திற்கு விண்ணப்பிப்பதற்கே உபயோகிக்கலாம். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(சி-9865) — பதிவாளர்.


# கஷ்டப் பிரதேசங்களுக்கு 1,300 ஆங்கில ஆசிரியர்கள்

## விரைவில் நியமனமாவர்

கொழும்பு, டிச. 6

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குவதற்காக விரைவில் ஆயிரத்து 300க்குக் கூடுதலான ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளியான — கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட — ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களே இவ்வாறு நியமிக்கப்படுவர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப்பெறுபேறுகளின் படி, ஆகக் கூடுதலான புள்ளிகளைப்பெற்றுக் கொண்டவர்களில் ஒரு தொகையினர் நேரடியாக ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறுவர் என்றும் —

இன்னும் ஒரு குறிப்பிட்ட தொகை புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒரு பகுதியினர் ''டெலிக்'' பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படுவர் என்றும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

### பாடசாலை மாணவர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக

# ஜி. சீ. ஈ. பரீட்சைக்குத் தோற்றினால் ஒழுங்கு நடவடிக்கை

## அதிபர்களுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், டிச. 6

பாடசாலைகளில் கல்வி கற்றுக் கொண்டு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களின் விவரங்களை சேகரிக்குமாறு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

11ஆம் ஆண்டு வகுப்பில் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்தியாக கட்டணம் செலுத்தாமல் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

ஆனால் 9ஆம் ஆண்டு 10ஆம் ஆண்டு வகுப்புகளில் கல்வி கற்கும் பாடசாலைகளில் கணிசமான தொகையினர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உரிய காலத்திற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றுவதால் பாடசாலைகளின் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளில் சீர்குலையும் ஒழுங்காக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலையும் தோன்றுவதாகக் கூறப்படுகின்றது.

தனியார் கல்வி நிலையங்கள் சில தமது கல்வித் தரத்தை எடுத்துக் காட்டி மாணவர்களைச் சேர்ப்பதற்கும்; பாடசாலைகளின் கல்விச் செயற்பாட்டை குறைத்துக் காட்டுவதற்கும் இதை ஓர் உத்தியாக பயன்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அதிபரின் அனுமதி இன்றி தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்கு விண்ணப்பிப்பதும்; பரீட்சைக்குத் தோற்றுவதும் சட்ட ரீதியான செற்பாடு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 6

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் நவம்பர் மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இன்று செவ்வாயும், நாளை புதனும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை—

யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என கூட்டுத்தாபன கணக்காளர் திரு க மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ)

# ஜேர்மனியில் தமிழர் எண்ணிக்கை மிக விரைவில் குறைந்து விடலாம்

## அங்கு சென்று திரும்பிய பேராயர் ஜெபநேசன் கருத்து

''ஜேர்மனியில் இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து வாழ்வது மிகவும் கடினமாகி வருகின்றது. இன்னும் சில ஆண்டுகளில் அங்கு தமிழர்களே இருக்கமாட்டார்கள்.''

கடந்த மாதம் ஜேர்மனிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தென் இந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

''தமிழ்ப் பிள்ளைகள் ஜேர்மன் மொழியிலேயே கற்க வேண்டியிருக்கிறது.

இதனால் பிள்ளைகளின் படிப்பில் பெற்றோர் உதவ முடியாதுள்ளது.

ஆகவே பலர் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு ஆங்கில மொழிபேசும் நாடுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

ஜேர்மனியில் உள்ள தமிழ் மக்கள் பெரும்பாலும் கடும் உடல் உழைப்பில் ஈடுபட்டே பணம் சம்பாதிக்கின்றனர் என்றார் அவர். (க-161)

# நோர்வே - யாழ். பல்கலைக்கழகங்கள் கலைத்துறையில் இணைப்புச்சேவை

யாழ்ப்பாணம் டிச. 6

யாழ். பல்கலைக்கழகத்துடன் புவியியல், சரித்திரவியல் துறைகளுடன் இணைப்புச் சேவையை மேற்கொள்ள நோர்வே வேர்ஜின் பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது.

இத்துறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் விரிவுரையாளர்களைப் பரிமாறிக்கொள்ளவும்—

மேலும் இத்துறைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கவும்— நோர்வே பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது.

இத்துறைகளில் தமது சேவையை வழங்க தேவையான விவரங்கள் அடங்கிய அறிக்கையை அந்தப் பல்கலைக்கழகத்திடம் கேட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் தெரிவித்தார். (இ-3)

# உலர் உணவு நிவாரணம் இல்லாமல் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் அவதி

## புனர்வாழ்வுப் பகுதி அசமந்தம் எனக் கண்டனம்

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச உலர் உணவு கடந்த பத்து வாரங்களாக வழங்கப்படாமல் இருப்பதினால் மக்கள் [illegible] நாளாந்தம் பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகளுக்கு அலைந்து திரிந்து ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் தொழில் வாய்ப்பை இழந்து அல்லலுறும் மக்கள் வெளிச் சந்தையில் உணவுப் பொருள்களை பெறமுடியாத அளவுக்கு பொருள்களின் விலையுயர்வும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் சொல்லொணாக் கஷ்டத்தையும் துன்பத்தையும் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமைக்கு யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினரின் அசமந்தப்போக்கே காரணம் என்று இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (இ-17)

# யாழ். மாநகர சேதமடைந்த வீதிகள் ஜனவரிக்குப் பின்பே திருத்தப்படும்

## போதுமான தார் இல்லையாம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளைத் திருத்தும் வேலைகள் ஜனவரி மாதத்துக்கு பின்னரே நடைபெறும் என்று மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீதிகளை திருத்துவதற்கு தார் முடிந்திருப்பதால் [illegible]கள் திருத்தும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குண்டும் குழியுமாக இருக்கும் வீதிகள் மட்டும் தற்போது மக்கி மற்றும் கிறவல் கல்லைப் பயன்படுத்தி திருத்தப்பட்டு வருகின்றன.

கொழும்பில் இருந்து தாரை எடுத்து வருவதற்கு யாழ். மாநகரசபை [illegible] வாகனங்களோடு வருவ[illegible] தெரிவித்தார்.

சமீபத்தில் பெய்த மழை காரணமாக குடாநாட்டின் வீதிகள் பல மிகவும் மோசமான முறையில் சேதம் அடைந்துள்ளன.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கும் இதுவே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாகன ஓட்டிகள் வீதிகளில் [illegible]களைத் தவிர்த்து வாகனத்தைச் செலுத்த முற்படும் போது விபத்துக்கள் சம்பவிக்கின்றன. (இ-17)

# ராஜீவ் கொலை வழக்கில் இலங்கைப் பொலீஸார்

ராஜீவ் கொலை வழக்கில் சாட்சியமளிப்பதற்காக ஸ்ரீலங்காவைச் சேர்ந்த சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் ஏழு பேர் தற்போது இந்தியாவில் தங்கியிருக்கின்றனர்.

இவர்களில் ஒருவர் முன்னாள் உதவிப் பொலீஸ் மா அதிபராவார்.

வெளிநாடொன்றைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகள் இந்தியாவில் கொலை வழக்கு ஒன்றில் சாட்சியமளிப்பது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)


## சேர். பொன் இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினம்

கார்த்திகை மாதத் திருவோண நட்சத்திரம் கூடிய 7-12-94 புதன்கிழமை காலை 9 மணியளவில் சேர். பொன். இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினம் யா/ இராமநாதன் கல்லூரி வளவில் அமைந்த இராமநாதேஸ்வர ஆலயத்தில் (சமாதி) நடைபெற இருப்பதால், அத்தருணம் பழைய மாணவிகள் பெற்றோர் நலன்விரும்பிகள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
02-12-94

(சி-5749)



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

### விசர்நாய்கள் கட்டளைச்சட்டம்
## விசர்நாய்களின் அபாயம்

இத்தால் அறிவிக்கப்படுவதாவது, இலங்கை சட்டவாக்கங்களின் விசர்நாய்கள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 476/2ஆம் பிரிவு 2இன் பிரகாரம்) வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் விசர்நாய்களின் அபாயம் இருக்கிறது. பிரத்தியேகமான கட்டடங்கள் அல்லது வளவுகள் அல்லது தோட்டங்கள் தவிர்ந்த இந்தச் சபை எல்லைக்குள் கட்டி வைக்கப்படாமல் அல்லது பிடித்துக்கொண்டு செல்லாமல் பொது இடங்களில் அல்லது வீதிகளில் அல்லது வேறு எந்த இடத்திலும் நிற்கும் எந்த நாய்களும் என்னால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் அழிக்கப்படும்.

இப்பிரகடனம் 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

து. வைத்திலிங்கம்.
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய். 1994-12-01

(சி/9931)



## ஆண்டு -5 புலமைப்பரிசில் பரீட்சை- 1994
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
## மாவட்டத்தில் முதலிடம்

அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தையும் யாழ். மாவட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்ற ந. ஜீவன் (184 புள்ளிகள்), யாழ். மாவட்டத்தில் 3ஆம் இடத்தையும் உடுவில் கோட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்ற செ. பிரசாத் (181 புள்ளிகள்), பாடசாலையில் 3ஆம் இடத்தைப் பெற்ற வி. பிரியா (167 புள்ளிகள்) என்போருடன் மா. மாலினி, ச. லலிதாங்கி, ச. சந்திரமோகன், ப. அனுசியா ஆகிய சித்தியடைந்த மாணவர்களையும் வாழ்த்தி அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,
பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்.

(7824)



புதிதாக மலர்கிறது
## வெஸ்லி அக்கடமி
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

## 1995-ம் ஆண்டுக்கான வகுப்புகள்

ஆண்டு 5முதல் O/L வரை
ஆரம்பம்: 10-12-1994
சனி முற்பகல் 8-30

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | ரவீந்திரன் |
| | | சி. ஸ்ரீகாந்தன் |
| கணிதம் | — | தே. ஜெயசீலன் |
| சமூகக்கல்வி | — | ம. ஸ்ரீபாஸ்கரன் |
| வர்த்தகம் | — | ம. ஸ்ரீபாஸ்கரன் |
| தமிழ் | — | தர்மராஜா |
| | | சுதாகரன் |
| ஆங்கிலம் | — | கண்ணதாசன் |
| | — | V. T. நீதிராஜா |
| சித்திரம் | — | மகேந்திரன் |
| சமயம் | — | ம. குபேந்திரன் |

★ புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் நலன்கருதி கிழமை தோறும் பரீட்சைகள் சிறப்பான ஆசிரியர் குழுவினால் நடத்தப்படும்.
★ ஐந்து பாடத்திற்கு மேற்பட்ட பாடங்களை எடுக்கும் மாணவருக்கு சமயம் இலவசம்.
★ O/L மாணவர்களுக்கு சகல பாடங்களிலும் ஆண்டு 9, 10 பாடத்திட்டமும் மீட்கப்படும்.
★ அனுமதிகளை (10 12 1994) சனிக்கிழமைக்கு முன்னதாக காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.

[34057]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3, 4 அங்குல எஸ்-லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் நாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம். [33981]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியா சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34037)

### அஷ்டலஷ்மி

அஷ்டலஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. அஷ்டலஷ்மி தினத்தாள் கலண்டர்கள் ரூபா 70/- பஞ்சாங்க கலண்டர் ரூபா 40/-. மேலதிகமான பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளாதீர்கள்! பதிப்பாளர்: சிவா பிறிண்டேர்ஸ், கைதடி. (8054)

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

### ஒத்துமாறல்

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் யாழ். மாவட்ட கல்வி வலயத்துக்கு ஒத்துமாறவிரும்புகிறார். தொடர்புகளுக்கு மே/பா உதயன், வி.இல. 726, யாழ்ப்பாணம். (34048)

### தவறிவிட்டது

4-12-94இல் மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கும், சண்டிலிப்பாய்க்கும் இடையில் தங்கக் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் தந்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. சிறி ஜெயந்தி, 'சுந்தர்சன்', மானிப்பாய் மத்திய சந்தை, மானிப்பாய். (34042)

### வகுப்புகள்

ஆண்டு 4—11 வரை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: அருணோதயம், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம். (34054)

### புதிய வகுப்புகள்

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை புதிய வகுப்புகள் 05-12-94 திங்கள் 3 மணிக்கு ஆரம்பமாகிவிட்டன. வாராந்த மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் தமிழ், கணிதம் புலமைப் பரிசில் வகுப்புகள் த. அம்பிகைபாகனால் கற்பிக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (34035)

### இலகு திருமண சேவை

27 வயது, உத்தரட்டாதி, செவ்வாய் - 7, ஜேர்மனியில் வதிவிட உரிமையுள்ளவருக்கு தற்பொழுது யாழ்ப்பாணத்தில் மணப்பெண் தேவை. மணமக்கள் நேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில், து விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [34016]

## நிர்வாக சேவை சான்றிதழ் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், டிச. 6

'இலங்கை நிர்வாக சேவையின் சான்றிதழ்' பயிற்சிநெறியின் 'ஆங்கில மொழி' மூலமான பயிற்சி, ஜனவரி 2ஆம் திகதி தொடங்கி ஒரு மாதத்திற்கு நடைபெறும் எனவும் இப்பயிற்சி 3 மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பயிற்சியாளர்களுக்கு உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்று மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து (விண்ணப்பங்கள்) 1994-12-28 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர் - சித்த மருத்துவம்
2. தற்காலிக செய்முறை காட்டுநர் - சித்த மருத்துவம்
3. தற்காலிக உதவி விரிவுரையாளர் - வரலாறு

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர் ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக உதவி விரிவுரையாளர்: ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தற்காலிக செய்முறை காட்டுநர்: ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றுக்கு

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென துறைத் தலைவராலும், பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவர், துணைவேந்தரால், விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவியில் வைக்கப்படுவதுடன் ரூபா 6050 — 10x250—8,550/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கப்படுவர்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) டன் சித்திபெற்றுள்ள பட்டதாரி ஒருவர் உதவி விரிவுரையாளராக (தகுதிகாண்) ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**குறிப்பு:**

அ) உதவி விரிவுரையாளர் ஒருவர் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10%மும், புத்தகப் படியாக, ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாக செலுத்தப்படும்.

ஆ) 1993 மே 12ஆம் திகதிய 9 / 93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் - வரலாறு பதவிக்கு, பெறுபேறுகளுக்காக காத்திருப்போரிடமிருந்தும் 1994 இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:**

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1994-11-30.

(சி-9860)

---

# A.T.C. INSTITUTE
## INUVIL

### மாணவர்களுக்கு
## ஓர் முக்கிய அறிவித்தல்

**05 — 12 — 1994** ஆரம்பமாக இருந்த புதிய ஆண்டுக்கான வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் **12 — 12 — 1994** அன்று அறிவித்த நேர அட்டவணையின் படி நடைபெறும்.

— நிர்வாகி.

(34055)

---

## பாலருக்கான அனுமதி

பரி. பேதுரு பாலர் பாடசாலை நிம்மர் மண்டபம்
(யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

31-01-95இல் 3 அல்லது 3½ வயது பூர்த்தியான சகல பிள்ளைகளும் இப் பாடசாலையில் அனுமதிக்கப்படுவர்.

விண்ணப்பப் பத்திரங்களை 05-12-94 இலிருந்து இப் பாடசாலையில் பெறலாம்.

**09 — 01 — 95** பாடசாலை ஆரம்பமாகும்.


★ பிள்ளைகளுக்கான விசேட ஆங்கில வகுப்புகளும் பாடசாலையில் நடைபெறும்.

— அதிபர்.

(சி-9869)

---

### ஓராண்டு
## நீங்காத நினைவலைகள்



சரவணையூர்

## அமரர் ஆறுமுகம் நல்லையா

தாயக மண்ணில்: 26 — 10 — 1938
அன்னிய மண்ணில்: 17 — 11 — 1993

திதி: 06 — 12 — 1994

அப்பா...... அப்பா...... எங்களுக்குயாரப்பா!
ஆண்டொன்று சென்றாலும் ஆறமுடியவில்லை- அதனால்
தேடி அலைந்தோம் வெறுமையே மிச்சம் - முடிவில்
உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்.

நல்லூர். [34000]

---

### முதலாவது
## பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் மேனன்

மேனன் தனது முதலாவது பிறந்தநாளை Hobro Denmarkஇல் கொண்டாடுகிறார் இவரை Denmarkஇல் உள்ள டடா, மம்மி, Colombo தாத்தா, பாட்டி, அப்பப்பா, அப்பம்மா, ஐயனார் கோயிலடி மல்லாகம் அம்மப்பா, அம்மம்மா Holland மாமாமார், மாமி, Denmark சித்தப்பாமார், Sweden சித்தப்பா, Colombo மாமிமார் மற்றும் உறவினர்கள் ஐயனார் துணைபெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்;
நி. சிவசுப்பிரமணியம்.

06-12-94,
ஐயனார் கோயிலடி,
மல்லாகம். (சி/5748)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 டிசம்பர் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்:**

உதைப்பந்தாட்டம்/ வலைகோர்ப்பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ மேசைவரிப்பந்தாட்டம்/ பூப்பந்தாட்டம் / மெய்வல்லுநர் பயிற்சிகள்/ உடற்பயிற்சி விளையாட்டுக்கள் / சதுரங்கம்/ கராட்டி/ துடுப்பாட்டம்/ வரிப்பந்தாட்டத்தில் இடைவரவு போதனாசிரியர்.

**கொடுப்பனவு விகிதம்:**

மணித்தியாலம் ஒன்றிற்கு 75/- ரூபா (மாதமொன்றுக்கு 900/-ரூபா உச்ச வரம்பிற்கு உட்பட்டு)

**தகைமைகள்**

1. தேசிய அணியொன்றையோ மாவட்ட அணியொன்றையோ தேசியப் பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப்படுத்தியிருத்தல் வேண்டும்.

   அல்லது

2. மாவட்ட அணியையோ மாவட்ட இணைந்த அணியையோ மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு பயிற்றியிருத்தல் வேண்டும்.

   அல்லது

3. விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பெற்ற பயிற்றுநராக குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

4. பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுகளைப் பயிற்றுதலில் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

   அல்லது

5. பாடசாலை ஒன்றில் அல்லது களரியொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாட்டு சங்கத்தினால் நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் விரமுதல்வரை அல்லது, இரண்டாம் இடத்தைப் பெற்றவரை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையில் சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசக்கட்டளை / தபாற் கட்டளையொன்றை 23X10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 1/- ரூபா முத்திரையொட்டப் பெற்ற கடிக உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:**

சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.


— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994 - 12 - 01

[சி-9859]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. மார்க்கண்டு

திதி: **06 - 12 - 1994**

மணம் வீசும் பள்ளிப் பருவத்தில் துள்ளித் திரிந்தாயே! அதனைக் கண்டு மகிழ்ந்தேன் ஐயா! அதன் பின்னால் உன் அம்மா கதி அற்றவளாய் நிலையற்று போனேன் ஐயா! சேயாக மீண்டும் வந்து இந்நிலையை மாற்றுவாயோ!

உன் ஆத்மா சாந்தி அடைய கடவுளை வேண்டுகிறேன்.

பிரிவால் துயருறும்;
அம்மா.

'தேவபவனம்'
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

தோற்றம்: 26 — 12 — 1920
மறைவு: 28 — 11 — 1992

திதி: 6 — 12 — 1994

அன்புக்கு இலக்கணமாய்
ஆண்டவனின் அடியவனாய்
இல்லத்துக்கு சுடரொளியாய்
சபையில் சிறந்தவராய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது.

பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

221/1, கஸ்தூரியார் வீதி, [illegible] (34020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தமிழர் நலன் பேணும் லட்சணம்

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நான்கு மாத காலத்திலேயே, ஐக்கிய தேசியக் கட்சி அரசாக — அதன் செயற்பாடுகளை அச்சொட்டாகக் கடைப்பிடிக்கும் அரசாக — மாறும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்!

தமிழர்களைப் பொறுத்த வரையில், இப்போது பதவியில் இருப்பது முந்திய ஐக்கிய தேசியக்கட்சி தானா என்று கேட்கும் அளவுக்கு புதிய அரசு சாயம் வெளுத்து விட்டது!

ஒகஸ்டில் பதவிக்கு வந்த புதிதில், தமிழர்களின் கஷ்டங்களை எல்லாம், இன்னல்களை எல்லாம் களைந்து அவர்களின் நலன்களைப் பேணப்போவதாக ஆசை வார்த்தை பேசியது.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பொருளாதாரத் தடையை சந்திரிகா தளர்த்தினார். அதனைக் கேட்டு, தடை நீக்கப்பட்ட பொருள்களாவது கட்டுப்பாடு, தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும் என்று வடக்குத் தமிழர்கள் நம்பினர்.

ஆனால் நான்கு மாதங்களில் தமிழ் மக்களின் அந்த நம்பிக்கை நாசமாகிப் போகும் வகையில், புதிய அரசும் முருங்கைமரத்தில் ஏறிய வேதாளம் ஆகிவிட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை வடக்கே கொண்டு வருவதற்குக் கூட, பாதுகாப்பு இணைப்புக் குழு என்ற பெயரில் இயங்கும் இராணுவ அதிகாரிகள் குழுவிடம் அனுமதி பெறவேண்டும் என்ற விதி மீண்டும் நடைமுறைக்கு வந்திருக்கிறது! ஐக்கியதேசியக் கட்சி அரசு செயற்படுத்திய அதே நடைமுறை! இத்தனைக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அப்போதும் சரி, இப்போதும் சரி தடை செய்யப்பட்ட பொருள்கள் பட்டியலில் இல்லை!

வடக்கே பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கும் அதிகாரியாக விளங்கியவர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக பணிப்பாளர் திரு. புத்திசிறி வர்த்தனா.

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுவிட்டதால், தடை விதிக்கப்படாத உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் தடை நீக்கப்பட்ட பொருள்களையும் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு இணைப்புக் குழுவின் உத்தரவு பெறவேண்டியதில்லை என்று அவர் அப்போது தெரிவித்திருந்தார்.

ஒரு சில வாரங்களாக மட்டுமே புதிய ஒழுங்கு நடைமுறையில் இருந்தது. இப்போது மீண்டும் ஒகஸ்ட் மாதத்துக்கு முந்திய நடைமுறை எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே நடைமுறைக்கு வந்து இருக்கிறது!

மக்களின் அன்றாடத்தேவையான உணவுப் பொருள்களை கப்பல் மூலமோ, தரைமார்க்கமாகவோ கொண்டு வருவதாயினும், இராணுவ அதிகாரிகள் குழுவிடம் அனுமதி பெற வேண்டும். வடக்கின் அரச அதிகாரிகள் பல நாள் தவம் கிடந்து, படி ஏறி, அலைந்து திரிந்து கஷ்டப்பட்டே அவற்றை இங்கே கொண்டுவர வேண்டும்.

தனியார் துறையினர் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதாயின் இராணுவத்தினருக்கு கையில் "பசை பூச" வேண்டும். இல்லையேல் கேட்ட எண்ணிக்கையில் பத்தில் ஒன்று தான் கிடைக்கும்!

பொருளாதாரத் தடைத் தளர்வும், தாராளமாகப் பாவனைப் பொருள் கிடைப்பதும், தமிழர் நலன் பேணுவதும், அவர்களின் கஷ்டங்களை நீக்குவதும் இந்த லட்சணத்தில்தானா? படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற இந்த ஏமாற்று வேலை, உலகத்துக்கு வேடம் போட்டுக் காட்டி நிதி உதவி பெறும் நாடகம் தானா?

சிங்களத் தலைவர்களுக்கு இலகுவில் கைவரும் கலை இதுவே! தாமும் அதற்கு விதிவிலக்கல்லர் என்று சந்திரிகாவும் நிரூபித்துக் காட்டுகிறார்!

# ரஷ்யாவில் கொள்வனவு செய்த ஹெலிகளில் பாரதூரமான தொழில்நுட்பக் கோளாறுகள்

## விமானப்படை அதிகாரிகள் குழு சைபீரியா பயணம்

கொழும்பு, டிச. 6

அண்மையில் ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று எம்.ஐ. 17 ரக ஹெலிக்கொப்டர்களில் பாரதூரமான தொழில் நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக மூன்று போக்குவரத்து விமானங்களையும்— ஆறு ராட்சத போக்குவரத்து ஹெலிக்கொப்டர்களையும்—கொள்வனவு செய்வதற்கு விமானப்படை எடுத்து வரும் நடவடிக்கைகளை இது பாதித்துள்ளதாகவும்—

இவ்விவகாரம் விமானப்படையின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் சண்டே ரைம்ஸ் தகவல்வெளியிட்டுள்ளது.

இதனை அடுத்து, ஹெலிக்கொப்டர்களுக்குப் பொருத்தப்படும் சில உதிரிப்பாகங்களின் தரம் குறித்து உத்தரவாதம் பெறுவதற்கு 4 பேர் கொண்ட அதிகாரிகள் குழு ஒன்றை சைபீரியாவுக்கு விமானப்படை அனுப்பியுள்ளது.

இந்த ரக ஹெலிக்கொப்டர்களைத் தயாரிக்கும் நிறுவனம் சைபீரியாவில் இயங்குகின்றது.

கடந்த வாரம் சைபீரியா சென்ற இலங்கை விமானப் படைக்குழுவுக்கு எயர் கொமடோர் எல் மோ பெரேரா தலைமை வகிக்கிறார்.

ஹெலிக்கொப்டர்களில் கண்டு பிடிக்கப்பட்ட பாரதூரமான தொழில் நுட்பக் கோளாறுகள் பற்றி விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

இலங்கையில் பறக்கக் கூடிய விதத்தில் இந்த ஹெலிக்கொப்டர்களின் என்ஜின்கள் செய்யப்பட வில்லை என்றும் — பிரதான கியர் பெட்டி மட்டுப்படுத்தப்பட்ட நேரம் மட்டுமே இயங்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஏப்ரலில் கைச்சாத்திடப்பட்ட ஹெலிக்கொப்டர் கொள்வனவு உடன்படிக்கையின் படி அதற்குரிய சில உதிரிப்பாகங்கள் தயாரிப்பாளர்களால் விமானப் படைக்கு விநியோகிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## கலந்துரையாடல்

தென்மராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

எனவே தென்மராட்சிக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது. (க)

## தாவடியில் பனை நடுகை

மாவீரர் வாரத்தை முன்விட்டு, மாவீரர் நினைவாகத் தாவடி மயானவளவில், சற்பகச்சோலைத்திட்டத்தின் கீழ் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் நவ. 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இப் பனைநடுகையில் பனை தென்னை வளப்பகுதி ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (க)

## மக்கள் வங்கியில் 25 வருட சேவை:

# 321 ஊழியர்களுக்கு தங்கப் பதக்கங்கள்!

மக்கள் வங்கியில் 25 ஆண்டு காலம் பணிபுரிந்தவர்கள் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் 321 ஊழியர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த வைபவத்தில் மக்கள் வங்கியின் தலைவர் டாக்டர் காமினி லக்ஷ்மன் பெர்னாண்டோ உரையாற்றும் போது, மக்கள் வங்கியில் 60 லட்சம் வாடிக்கையாளர்கள் இருப்பதாகக் கூறினார்.

பொது முகாமையாளர் நிஹால் ஜெயவர்த்தனா பேசுகையில், நாடுமுழுவதிலும் 335 மக்கள் வங்கிக் கிளைகள் இருப்பதாகவும் இவற்றுள் 10 ஆயிரத்து 900 ஊழியர்கள் பணிபுரிவதாகவும் கூறினார். (ஒ-4)

# நேற்று வந்த கோமாரியில் இறக்கும் பணி ஆரம்பம்

## தனியாருக்கு சீனியும் வந்தது

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்றுக்காலை வந்து சேர்ந்த கோமாரி கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும்பணி உடனடியாக ஆரம்பமானது.

அரிசி, சீனி, கடலை, தேயிலை, லக்ஸ்பிறே, ஹைலண்ட் பால்மா, தீப்பெட்டி, ரவை, உள்ளி, மிளகு, பெருஞ்சீரகம், சின்னச்சீரகம், வெந்தயம் போன்ற பொருள்கள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

தனியார் சிலருக்கும் சீனி, தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்கள் எடுத்துவரப் பட்டுள்ளன.

அத்தியாவசியப் பொருள்களை விரைவாக இறக்கி முடிக்க வேண்டியிருப்பதால் மாஹோ, குமண கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை.

அவை இரண்டும் காங்கேசனில் தரித்து நிற்கின்றன. (ஒ-173)

# சந்திரிகா அரசுக்கு எதிராக் நம்பிக்கையில்லா தீர்மானம்

## ஐ.தே.கட்சி கொண்டுவரும்

கொழும்பு, டிச. 6

தேர்தல் வன்செயல்கள் குறித்து பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது என்று ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப் பட்டது.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுதாக்கல் செய்வதில்லை என்ற செயற்குழுவின் தீர்மானத்தை அடுத்தே இம்முடிவு எடுக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரின்போது இது சமர்ப்பிக்கப் படும் என்றும் 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)

# கொழும்பில் தேடுதல் நடவடிக்கை தீவிரம்

தலைநகர் கொழும்பில் படையினரது தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று முன்தினம் அறிவித்தது.

நத்தாருக்கு முன் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க இருப்பதாக அரசு அறிவித்துள்ள அதேவேளை கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது. (இ-ஐ-6)

## சொத்தி உபாலியிடம்

# வாக்குமூலம் பதிய அனுமதி மறுத்தது ஏன்?

## நீதிவான் விளக்கம் கோருகிறார்

நீதிமன்ற உத்தரவுப்படி, சந்தேக நபரான சொத்தி உபாலியிடம் வாக்குமூலம் பதிவதற்கு அனுமதி மறுத்தது ஏன் என மஹர சிறைச்சாலை அத்தியட்சகரிடம் நீர் கொழும்பு சிரேஷ்ட நீதிவான் விளக்கம் கோரியிருக்கிறார்.

நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் மேற்படி சந்தேக நபரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யத் தாம் சென்ற போது, அதற்கு சிறைச்சாலை அத்தியட்சகர் அனுமதியளிக்க மறுத்துவிட்டார் என பொலீஸ் இன்ஸ்பெக்டர் மனு ஒன்றை சமர்ப்பித்ததை அடுத்தே நீதிவான் விளக்கம் கோரும் உத்தரவை விடுத்தார். (உ)

# பெரிய அளவில் கைத்தொழில்களை கிழக்கில் ஆரம்பிப்பதற்கு முயற்சி

## கைத்தொழில் அபிவிருத்தி மையம் அமைப்பு

கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில்களை பெரிய அளவில் மேற்கொள்வதற்காக "கிழக்கு பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி மையம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளத்தக்க கைத்தொழில்களை இனம் காண்பது —

கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகளை பெற்றுக் கொடுப்பது —

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அவர்களை அங்கு முதலீடு செய்ய ஊக்குவிப்பது — போன்ற நோக்கத்துக்காக இந்த அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

கிழக்கு மாகாண தொழில் ஆணையாளர் திரு. எஸ். நடராசாவை தலைவராகவும், தேர்தல் ஆணையாளர் திரு. எஸ். சண்முகத்தை செயலாளராகவும் கொண்டு செயல்படும் இந்த அமைப்பில் பல்துறைசார்ந்த 15 வல்லுநர்கள் இடம்பெற்றுள்ளனர்.

திருகோணமலையில் உள்ள மாகாணசபையின் உள்துறை அமைச்சில் செயலகத்தைக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் அலுவலகம், எதிர்வரும் 14ஆம் திகதி முதல் மட்டக்களப்புக்கு மாற்றப்பட இருக்கின்றது.

இந்த அமைப்பின் கோரிக்கையையடுத்து தேசிய பயிலுநர் சபை பல்வேறு துறை சார்ந்த 100 பேரை தெரிவு செய்து நிலாவெளியில்வைத்து தொழிற்பயிற்சி அளித்து வருகிறது. (இ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

**06 — 12 — 1994**

**செவ்வாய் இரவு**

- ★ 8-01 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா? – நிகழ்ச்சியில் "எய்ட்ஸ் என்னும் பயங்கர நோய் வராமல் தடுப்பதற்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய "முன்னேற்பாடு"
- ★ 8-50 — களமும் கானமும் – எஸ். லாவண்யா எழுதிய 'புரிந்துணர்வு'
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**07 — 12 — 1994**

**புதன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# பொலீஸ் அதிகாரியை கடத்தினார் வீரப்பன்!

## கோவையில் சம்பவம்

சென்னை, டிச. 6

தமிழக காவல்துறையின் உதவிக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதனும், அவரது உறவினர்கள் இருவரும் பிரபல சந்தன மரக் கடத்தல்காரரான வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கோவை அருகே உள்ள சிறும்பைக் காட்டுப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இவர்கள் மூவரும் கடத்தப்பட்டனர்.

இவர்களை விடுவிப்பதற்கு வீரப்பன் நிபந்தனை விதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது நிபந்தனைகள் அடங்கிய கடிதத்தை தான் கடத்திச் சென்ற வேறு மூவரிடம் கொடுத்து அவர்களை வீரப்பன்விடுதலை செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீரப்பன் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து மாநில காவல்துறைத் தலைவர் திரு சி. பால் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆலோசனை நடத்தி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

# ஆறுமுக நாவலர் ஆய்வு நிதியம் விரைவில் அமைக்கப்பட வேண்டும்

## இந்து நாகரிகத்துறைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 6

"நாவலர் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடியதாக நாவலர் ஆய்வு நிதியம் அமைக்கப்பட வேண்டும்."

நாவலர் குருபூசையில் தலைமை வகித்து உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி பா. கோபாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

குருபூசை யாழ். பல்கலைக் கழக இந்து மாமன்றத்தின் சார்பில் கைலாசபதி கலையரங்கில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

கலாநிதி கோபாலகிருஷ்ணன் மேலும் கூறியதாவது:

எத்தகைய இன்னல்கள் நேரினும் கூட தமிழும் சைவமும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலும் மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதிலும் நாவலர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது உரையில் கூறியதாவது:

நாவலரின் பேச்சாற்றலே சேர். பொன். இராமநாதன் சட்டசபைக்குச் செல்லக் காரணமாக இருந்தது. எமது மண்ணின் சமூக சமய மொழி கலாசார பாதுகாப்புக்கு நாவலர் பெரும்பங்காற்றினார். இந்தப் பெரியாரின் பணிகளே இன்று நாம் ஆற்றும் பணிகளுக்கு உந்து சக்தியாக அமைந்தன என்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் கூறியதாவது:

தமது இளம் வயதிலேயே மாணவர்களுக்கு கல்வியில் விருப்பை ஏற்படுத்தும் பொருட்டு இலவசக் கல்வியை அவர்களுக்கு வழங்கினார்.

ஆலயங்களில் தவிர்க்கப்பட வேண்டிய உயிர்ப் பலியிடுதல், தேவதாசிகளின் நடனம் போன்ற பல வேண்டாதனவற்றைத் தவிர்க்கவும் பாடுபட்டார் என்றார்.

துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பேசும் போது கூறியதாவது:

மேற்கத்திய நாடுகளுக்கு முகம் கொடுத்து எமது மொழியையும் கலாசாரத்தையும் நாம் இழக்கவில்லை என்றால் அதற்கு நாவலரே காரணம், முன்னூறு ஆண்டு அன்னியர் ஆட்சியில் எமது இனம், மத, பண்பாட்டு ரீதியில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட போது சைவத்தினது ஆழ்ந்த கோட்பாடுகளையும் மொழியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி தீவிர பிரசாரங்களை மேற்கொண்டார்.

தமிழ் நூல்கள் பலவற்றை அச்சிட்டு அச்சில் ஏற்றினார். மிஷனறிமாரின் வருகையால் சில நன்மைகள் பெற்றாலும் எமது கலாசார விழுமியங்களை நாம் இழக்கக் கூடாது என்பதில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். நாவலர் தமிழும் சைவமும் வளர உழைத்தது போல் நாமும் அவற்றை வளர்க்க உறுதி பூண வேண்டும். இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் பேசும்போது கூறியதாவது:

தெற்கில் அநாகாரிக தர்மபாலா பற்றி சிங்களத்தில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பல நூல்கள் வெளியாகியுள்ளன. பிற நாட்டார்களும் நாவலர் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடியதாக விரிவான ஆய்வுகள் மேற்கொள்வதுடன் அவர் குறித்த ஆங்கில நூல்கள் பலவும் வெளிவர வேண்டும். இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

யாழ். பல்கலைக் கழக இந்துமாமன்றத் தலைவர் திரு. கே. ஈஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

துணைவேந்தர் பேராசிரியர் குணரத்தினம் மங்கள விளக்கேற்றி நாவலர் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

[illegible] கழக மாணவர்களின் கலை [illegible] நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-111)

# எம். ஜி. ஆர். நினைவு நாள்

யாழ்ப்பாணம், டிச. 6

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் கொண்டாடப்படவிருக்கிறது.

அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் ஏற்பாட்டில் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படவிருக்கும் இந்த நினைவு நாளையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம், கரகாட்டம், சிலம்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் — [illegible]க்கிள், சைக்கிள் ரிக்ஷோ போட்டிகளுக்கும் — ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (இ-3)

## யாழ். நகரில் நடந்த சம்பவம்:

# ரேடியோ வாங்க வந்தவர் பணம் பறி போயிற்று!

## சங்கானை வாசியின் அனுபவம்

ரேடியோ வாங்கவென யாழ். நகர் வந்த சங்கானை வாசி ஒருவர் ஆயிரம் ரூபாவை ஏமாற்றுப் பேர்வழி ஒருவரிடம் இழந்து விட்டு ரேடியோவும் வாங்காது வீடு திரும்பினார்.

சங்கானை வாசி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பின் வீதியில் உள்ள கடை ஒன்றில் ரேடியோ விலை கேட்டதை அவதானித்த ஏமாற்றுப் பேர்வழி அவரிடம் சென்று தன்னிடம் ரேடியோ விற்க இருப்பதாகக் கூறி தன் வீட்டில் வந்து பார்க்கும்படி கேட்டாராம்.

அவர் சம்மதம் தெரிவிக்கவே தனது சைக்கிளில் ஏற்றிச் சென்று, விக்டோரியா வீதியில் அவரை இறக்கிவிட்டு, ஆயிரம் ரூபா மாற்றித் தரும்படி கேட்டுள்ளார். சங்கானை வாசி தன்னிடம் இருந்த பணத்தில் ஆயிரம் ரூபாவை (இரண்டு ஐந்நூறு ரூபா) வெளியே எடுத்த போது, அப்பணத்தை பறித்துக்கொண்டு சைக்கிளில் ஏறிதலைமறைவாகி விட்டார் அந்த ஆசாமி.

தன்னிடம் பணத்தை அபகரித்த அந்த ஆசாமி உத்தியோகம் பார்க்கும் ஒருவர் போலநல்ல நீளக்காற்சட்டையும் சேர்ட்டும் அணிந்து நேர்த்தியாக காணப்பட்டார் என்று பணத்தைப் பறிகொடுத்தவர் தெரிவித்தார். (ஒ-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சிவசுப்பிரமணியம்

[காரைநகர்]

காரைநகர் வேம்படியைப் பிறப்பிடமாகவும் இல. 11, கஸ்தூரியார் லேன் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகக் கொண்ட வருமான திருமதி சிவபாக்கியம் சிவசுப்பிரமணியம் 5—12—94 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், நேசமலர், சடாச்சரம் (அம்பிகை களஞ்சியம் — யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், க. செ. கனகசபை (கணேசன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
க. சிவநேசன்
(பேரன்)

இல. 11, கஸ்தூரியார் லேன்.
யாழ்ப்பாணம். (34067)

### திருமதி கார்த்திகேசு பார்வதி

[காரைநகர்]

காரைநகர் பொன்னம்பலம் வீதியைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்புத்துறை இல. 19, 1 ஆம் குறுக்குத் தெருவில் வசித்து வருபவருமாகிய திரு. க. கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவி பார்வதி நேற்று 5 — 12 — 94 திங்கட்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

இவர் பேரின்பதாசன் (பிரான்ஸ்), கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், க. வேலாயுதம், பே. றோகினிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயகாந்தன், ஜனனி (யாழ் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), லவன், வாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று முற்பகல் 11.00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வேலாயுதம்
(மருமகன்)

(34068)

### நரசிங்கம் செல்லத்துரை

[இளைப்பாறிய அதிபர் கேகாலை அ.த.க வித்தியாலயம்]

கருகம்பனை வத்துவானப்புலத்தைச் சேர்ந்த நரசிங்கம் செல்லத்துரை 05-12-94 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற நரசிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், கொல்லங்கலட்டி தாமோதரம் பிள்ளை- ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகள் மனோன்மணியின் [இளைப்பாறிய ஆசிரியை யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்] அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பு, இராசையா, நடராசா, திருமதி. சி.செல்லம், பொன்னுத்துரை (இளைப்பாறிய கனிஷ்ட அதிபர் வீமன்காமம் ம வி.), திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி கி. சுமதி (கனடா), நாவலன் (கனடா), அகிலன், சபேசன் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இ. நாகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர் வசாவிளான் ம.ம வி.), பாலசிங்கம், சின்னத்தம்பி, திருமதி. பொ. சரஸ்வதி அம்மா (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி. சி.செல்லமுத்து (மலேசியா), திருமதி. சோ. அன்னலட்சுமி (கொழும்பு), ஆகியோரின் மைத்துனரும் நா கிரிதரன் (கனடா), நா. சண்முகரத்தினம் (ஆசிரியர் யா/ அச்சுவேலி ம வி), நா. அருந்தவரத்தினம், சி. ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), சி. லலிதாம்பிகை, சி நகுலாசலபதி (பிரான்ஸ்), பா. சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கி. தர்சன் (கனடா, கி. மதுசன் (கனடா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 06-12-94 இன்று மு.ப. 10 மணியளவில் இருபாலை கிழக்கு செண்டாவளவிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
செ. அகிலன்
[மகன்]

செண்டாவளவு,
இருபாலை கிழக்கு,
இருபாலை. [34065]

### R. D. தனபாலசிங்கம்
(போடிங் மாஸ்ரர்)

வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட R. D. தனபாலசிங்கம் அவர்கள் 5- 12- 94 நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையா - திரவியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், றோஸ் அரியமலர் அவர்களின் அன்புக்கணவனும், ஜெயந்தினி (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற றெஜினோல்ட் அரியபாலன், டெனிஸ் அற்புதபாலன் (கனடா), ஜேம்ஸ் அமிர்தபாலன் (திட்டப் பொறுப்பாளர்- தேசிய கிறிஸ்தவ சபை), றெஜினோல்ட் அஞ்சுகபாலன் (பெற்றி- கனடா) ஆகியோரின் அருமைத் தகப்பனும்—

திருமதி நடராசா அற்புதராணி (கொழும்பு), திரு. பூரணசற்குணம் (கனடா), திரு. இராஜேந்திரா (நியூசிலாந்து), திரு. செல்வேந்திரன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. செல்வராஜா, திருமதி நேசமலர் தேவராஜா ஆகியோரின் மைத்துனரும், திரு. மித்திரரஞ்சன் (தென்னிந்திய திருச்சபை, அச்சக முகாமையாளர்), திருமதி டொற்றில்டா அமிர்தபாலன் ஆகியோரின் மாமனாரும், ஜோன் அஞ்சனா, ஜோகான் அஞ்சுகன், டேவிட் டில்சான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதி நல்லடக்க ஆராதனை 6- 12- 94 இன்று பி. ப. 4. 30 மணிக்கு கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அரியமலர் தனபாலசிங்கம்
(மனைவி)

(சி/9876)

---

பனம் பொருள் அபிவிருத்திச் சபை:

# முன்னாள் தலைவரின் கடந்தகால நடவடிக்கையை விசாரிக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு வாசுதேவ நாணயக்கார கடிதம்

யாழ்ப்பாணம், டிச. 6

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் கே. நடராஜாவின் கடந்த கால நடவடிக்கைகள் லஞ்ச ஊழல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட வேண்டும்.

இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் தலைவர் இழைத்ததாகக் கூறப்படும் மோசடிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் திரு. வாசுதேவ நாணயக்கார இணைத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதவியுடன் அவர் மீண்டும் நியமனம் பெற முயற்சிப்பதாகவும் அவர் மீண்டும் நியமனம் பெற்றால் அவர் மீதான குற்றச் சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியவரும் என்றும் திரு. நாணயக்கார தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் தலைவராக 13 ஆண்டுகள் சேவைபுரிந்த அவரைப்பற்றி நிர்வாக சீர்கேடு ஒழுங்கற்ற நிதி செலவினங்கள், மோசடி மற்றும் ஊழல் போன்ற பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் திரு. வாசுதேவ நாணயக்கார தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

### வீரச்சாவு!

மணலாறுப் பகுதியில் கடந்த சனியன்று விடுதலைப் புலிகள் போராளிகள் மீது படையினர் தாக்குதல் நடத்த முற்பட்ட வேளை இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் துரையரசன் அல்லது நகுலன் (தர்மலிங்கம் அரவிந்தன் - சாஸ்த்திரி கூழாங்குளம் வவுனியா), லெப்டினன்ட் திலகன் (கோபாலசிங்கம் உதயகுமார் — புதுக்குடியிருப்பு) ஆகிய இருவருமே வீரச்சாவடைந்தனர். (ஐ-4)

### கோமாரியில் தபால் பொதிகள்

கோமாரி கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்று செவ்வாய் விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபால் அதிபர் திரு. எஸ். கோமேஸ்வரன் தெரிவித்தார்.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட 185 தபால் பொதிகள் நேற்று நண்பகல் இறக்கப்பட்டு யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன. (ஒ-173)

## அமைச்சரவை இரகசியம்: வெளியிட்டால் நடவடிக்கை

கொழும்பு, டிச. 6

அமைச்சரவை ரகசியங்களை வெளியிடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா எச்சரித்திருக்கிறார்.

அமைச்சரவையில் பேசப்படும் விஷயங்கள் சொல்லுக்குச் சொல் பத்திரிகைகளில் வெளியாவது குறித்து கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மகிந்த சமரவீர தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து வேறு சில அமைச்சர்களும் இது பற்றி முறையிட்டனர்.

இரகசியங்களை வெளியாக்குபவரை தமக்கு தெரியும் என்று கூறிய ஜனாதிபதி அவர் கண்டுபிடிக்கப்பட்டால் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படுவார் என்று எச்சரித்தார் என கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (உ-எ)

### கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் "ஆரம்ப சுகாதாரமும் ஆரோக்கியமும்" என்ற தலைப்பிலான கருத்தருங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அரியாலை நாவலடி உதய ஒளி சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 50க்கு மேற்பட்ட இளம் பெண்கள் பங்குபற்ற உள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி கமலா சிவசிதம்பரம் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன், உலர்வலயத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன், சமூகசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். நகுலேந்திரன், யாழ். போதனா வைத்தியசாலை தாதி அலுவலர் திரு. கே நந்தகுமார், மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (இ)

### நெசவாளர் சங்க பொதுக் கூட்டம்

கொழும்புத்துறை, டிச. 6

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று இன்று செவ்வாய் கோண்டாவில் புடைவைநெசவாளர் கூட்டுறவுச் சங்க ஆலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சி க. திருச்சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறும். (க-1)

### ஆலயங்களில்

மிருசுவில் புனித நிக்கலஸ் தேவாலய நவநாள் உற்சவம் இன்று செவ்வாய் காலை திருப்பலி பூஜையும் திருச்சொருப பவனியும் இடம்பெற்று நிறைவு பெறும். (ஒ-117)

## கூட்டணிக் குழுவினர் சந்திரிகாவுடன் பேச்சு

கொழும்பு, டிச 6

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் கூட்டணியின் ஐந்து எம். பிக்கள் கடந்த வியாழன் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்த இப்பேச்சுகளில் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றிய விவரங்களை வெளியிட திரு.எம்.சிவசிதம்பரம் மறுத்து விட்டார் என்று "சண்டே டைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை ஜனாதிபதி காணுவார் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். (உ-3)

### பூநகரி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பூநகரியில் இருந்து வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட இவர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ஐ-3

### வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு.கரிகாலன் திறந்து வைத்தார்.

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணை ஆரம்பமானது. நீதியாளர் திரு. [illegible] சீர்கேடு தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றை நடத்தி [illegible] (ஐ 4)

### எம்.பி. பதவியை வி.பி.சிங் ராஜிநாமா!

புதுடில்லி, டிச 6

முன்னாள் இந்தியப் பிரதமரும் ஜனதா தளக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான திரு.வி.பி.சிங் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நேற்று ராஜினாமாச் செய்தார்.

தனது ஒருவரி ராஜிநாமா கடிதத்தை நாடாளுமன்ற அவைத் தலைவர் சிவராஜ் பட்டீலிடம் அவர் கையளித்தார். ராஜினாமாவுக்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை. (ஐ-க-4)

### ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்த பின்னர் கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வந்துள்ள ஆயர் சௌந்தரநாயகம் ஜனாதிபதியைச் சந்தித்து யாழ். குடாநாட்டுக்குத் தரைவழிப் போக்குவரத்துப் பாதையை திறப்பது தொடர்பாக பேச்சு நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையான மக்கள் பாப்பரசரைத் தரிசிப்பதற்காக கொழும்பு வர திட்டமிட்டுள்ளனர் — என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு பாப்பரசரை அழைத்துச் செல்வது சாத்தியம் இல்லை என்றும் ஆயர் சொன்னார்.

இதேவேளை —

"பாதுகாப்பான போக்குவரத்துப்பாதை இன்றி 6 லட்சம் மக்கள் உள்ளனர். மிகவும் கடினமான பாதை ஊடாகவே நான் கொழும்பு வந்துள்ளேன்

"விடுதலைப்புலிகளுடனும் இது பற்றி பேசியுள்ளேன். அனைத்துத்தரப்பினரிடமிருந்தும் நான் பதிலை எதிர்பார்த்துள்ளேன்" என்று ஆயர் சொன்னதாக 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-இ-எ-3)

### ஒன்றரைக் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை கொள்வனவு செய்யப்படுகின்றன.

இக் கவச உடைகள் பற்றிய சோதனை இராணுவத் தளபதி நியமித்த விசேட குழு ஒன்றினால், இராணுவத்தின் சுடும் பயிற்சித் தளத்தில் நடத்தப்பட்டது. பல்வகையான வெடிப்பொருள்கள், ரவைகள் பயன்படுத்தி சோதனை நடத்தப்பட்டதில் அமெரிக்காவில் இருந்து வந்த கவச உடையே இறுதியில் தெரிவு செய்யப்பட்டது.

இக் கவச உடைகள் விரைவில் கப்பல் மூலம் கொழும்பு வந்து சேரவுள்ளன. (உ-எ)

### முதலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதில் அரசு அக்கறையாக உள்ளது.

இதனைத் தொடர்ந்து பொது யுத்தநிறுத்தம் வரும். —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் யுத்த நிறுத்தம் குறித்து 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் பாதுகாப்பு அறிக்கை பற்றிய கட்டுரையிலும் பிரஸ்தாபிக்கப்படுள்ளது

நத்தார் பண்டிகைக் காலத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்க அரசாங்கம் இணங்கும் என்றும் —

பாப்பரசர் ஜனவரி 20இல் கொழும்புக்கு விஜயம் செய்வதை ஒட்டி யுத்த நிறுத்தம் அத்திகதி வரை நீடிக்கும் என்றும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

### ஐ. தே. க.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த கார்களில் குறைந்தது பத்துகார்கள்விஜேதுங்காவின் அந்தரங்க உதவியாளர்கள் சிலரின்பெயர்களுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்கள் எல்லாம் விசாரிக்கப்படும் என்று திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இது பற்றி ஆராய கருணசேன கொடித்துவக்கு, ஜய விக்கிரமபெரேரா, விமல் விக்கிரமசிங்க, ஏ.ஸி.எஸ். ஹமீது, ரொனி டி மெல் ஆகியோரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் தான், ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்வதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### குண்டுத் தாக்குதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாள அட்டையையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும்—

அநுராதபுரம் - வவுனியா வீதியில் தடை முகாம்களில் உள்ள இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் பேணப்படும் பதிவேடுகளை ஆராய்ந்த புலன்விசாரணைக் குழுவினர், சம்பந்தப்பட்ட பெண்மணி குண்டு வெடிப்புக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னரே — ஒக்ரோபர் 21 ஆம் திகதியே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றிருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்துள்ளனர் என்றும்—

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

1987 இல் சாவகச்சேரியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டபோது மேற்படி புஷ்பமலரின் குடும்பமும் படுகொலையுண்டது என்றும்—

இந்தியப் படையினர் பலரால் புஷ்பமலர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும்—

தனக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் இழைக்கப்பட்ட கொடுமைக்கு வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் இந்தியப்படை ஸ்ரீலங்காவுக்கு வரக் காரணமாகவிருந்த காமினி திஸாநாயக்காவைகொல்லும்படி புஷ்பமலர் தூண்டப்பட்டார் என்றும் —

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### தென்மராட்சியில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, டிச.6

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி இன்று மிருசுவில் சனசமூக நிலையம், விடத்தற்பளை சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீசாலை மதுவன் சனசமூக நிலையத்திலும் வைத்து போடப்படும் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ-117)


மாணவர்களுக்குத் தேவையான
★ அப்பியாசக் கொப்பிகள்
★ பாடசாலை உபகரணங்கள்
அலுவலகங்களுக்குத் தேவையான
★ காகிதாதிகள்
★ இதர உபகரணங்கள்
பதிப்பகங்களுக்குத் தேவையான
★ காகித வகைகள்
★ அச்சு மைகள்
கட்டட வேலைகளுக்குத் தேவையான
★ கட்டடப் பொருள்கள்
★ பெயின்ட் வகைகள்
ஒரே இடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
புஷ்பா அன் கோ
293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9875)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிராசா ஆச்சிமுத்து

தாவடி பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி தம்பிராசா ஆச்சிமுத்து அவர்கள் நேற்று 5 - 12 - 94 அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் நடராசா, திருநாவுக்கரசு [அதிபர், நல்லூர் ஞானோதய வித்தியாலயம்), விஜயலட்சுமி (கனடா), உமாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதவதி, மதுரநாயகி (ஆசிரியை உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), பத்மநாதன் (கனடா), மாணிக்கவாசகர் (கனடா) ஆகியோரின் மாமியாரும், தவக்குமார், ஆனந்தக்குமார், செல்வக்குமார், ஜெயக்குமார், கலையரசி, திருவேணி (ஜேர்மனி), மஞ்சுளா விஜிதா, சுகன்யா, அருந்ததி (ஜேர்மனி), தயாநிதி (கனடா), ஜெயந்தி (கனடா), பஞ்சநிதி (கனடா), பவிச்சந்திரன் (கனடா), அனோஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பவித்ரா, ஆர்த்திகா, சஞ்சீவன், ரிஷா, லவண்யா, சரண்யா, சாதுஜன், சாயிஷங்கர் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05-12-94) இல் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் தாவடி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
த. திருநாவுக்கரசு
(மகன்)

பிள்ளையார் கோயிலடி,
தாவடி,
கொக்குவில். (34066)

### நடராசா மகேந்திரராசா

திருநெல்வேலியை பிறப்பிடமாகக்கொண்ட நடராசா மகேந்திரராசா 5—12—94 நேற்று பிற்பகல் காலமானார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனராஜன் (கனடா), மனோகரன் (கனடா), பிரகலதா, பிரபாகரன், நகுலேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணவேணியின் (கனடா) அன்பு மாமனாரும், நரேஸ் (கனடா), டயானி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம், நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் நல்லையா, கமலாம்பிகை, சிவகுருநாதன், பூலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரி, கமலேஸ்வரி (கனடா), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), ஜெயராணி (கனடா), பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

பாற்பண்ணை வீதி,
வைரவர் கோவிலடி,
திருநெல்வேலி. [3406]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 12 - 94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org